பொருட்களில் பெரும்பகுதி அங்கிருந்துதான் வருகிறது. எனவே, அதை மையமாக வைத்து, வாழை மரங்கள், வாழை நார்கள் உள்ளிட்ட தொழில்களைத் துவங்குவதற்கு அரசுக்கு ஒரு திட்டம் இருக்கிறது. பொதுவாக, தொழில் துறையைப் பொறுத்தமட்டில், அரசு தொழிலைத் துவங்குவதைவிட, தொழில்முனைவோர்கள் முதலீட்டோடு அதைத் தொடங்க முன்வந்தால், அவர்களுக்கான ஒரு facilitation செய்யக்கூடிய துறையாக இந்தத் துறை இருக்கிறது. ஆக, தொழில்முனைவோர்கள் வந்தாலும் நாம் அதைச் செய்யலாம் அல்லது I.I.T. போன்ற நிறுவனங்களில் யாராவது ஒரு Incubation Centre வைத்துக்கொண்டு, Startup போன்ற நிறுவனங்கள் இதைத் துவக்குவதற்கு முன்வந்தால், அரசின் சார்பாக எல்லாவிதமான வசதிகளையும் செய்து, அந்தத் தொழில்களைக் கொண்டுவருவதற்கான ஊக்குவிப்பினை நிச்சயமாக அரசின் தொழில் துறை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 175, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா, மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

175—

படித்துறைகள் அமைத்தல்

***2929—திரு. எம்.சி. சண்முகையா:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், மணக்கரை ஊராட்சி, வடக்கு அனந்தநம்பிக்குறிச்சி கிராமம், கீழக்கால் தாமிரபரணி ஆற்றில் படித்துறைகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், மணக்கரை ஊராட்சி, மருதூர் கீழக்கால் வாய்க்காலில் அனந்தநம்பிக்குறிச்சி வடக்கூர் ஆதி திராவிட பகுதி மக்களுக்கு படித்துறை கட்டுதல்

2022 ஏப்ரல் 26]

மற்றும் மருதூர் கீழக்கால் வாய்க்காலில் அனந்தநம்பிக்குறிச்சியைச் சேர்ந்த பொது மக்கள் பயன்படுத்திட வாய்க்கால் பாலம் அருகில் படித்துறை கட்டுதல் ஆகிய இரு பணிகளுக்கான உத்தேச மதிப்பீடு ரூ.4 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு, 2022–2023 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்து, பணி முடித்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா அவர்கள்.*

திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அனந்தநம்பிக்குறிச்சி வடக்கூர் பகுதி மக்களுக்கு இரு படித்துறைகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று பதில் கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், மணக்கரை, மேலூர் கிராமத்தில் ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் வசித்து வருகின்றார்கள். கீழக்கால் வாய்க்காலில் மயானத்திற்குச் செல்லும் சாலையில் பாலம் இருந்தது. அந்தப் பாலம் முழுவதும் இடிந்துவிட்டது. எனவே, அப்பகுதி மக்கள் போக்குவரத்திற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். பாலம் கட்டுவதற்கு சுமார் 80 இலட்சம் ரூபாய் ஆகும். அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையில், பாலம் அமைத்துக் கொடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா அவர்கள் ஏற்கெனவே கேட்ட அந்தக் கேள்விக்கு நிறைவேற்றித் தரப்படும் என்று பதில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது, அந்தப் பகுதியில் புதிதாக பாலம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதுபற்றி ஆய்வு செய்து, எதிர்காலத்தில் முன்னுரிமை தந்து, செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா அவர்கள்.*

திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மருதூர் மேலவாய்க்காலில் உள்ள கீழ்க்கண்ட கிராமங்களுக்கு படித்துறைகள் அமைக்க வேண்டும். சென்னல்பட்டி ஊராட்சியில் உள்ள 5 படித்துறைகளைப் பழுதுபார்க்க வேண்டும். வி.கோவில்புத்து ஊராட்சியில் புதிதாக 4 படித்துறைகளும், வசுவபுரம் ஊராட்சியில் ஒரு படித்துறையும், கீழநாட்டார்குளம் மற்றும் மேலநாட்டார்குளத்தில் ஒரு படித்துறையும், விட்டிலாபுரம் ஊராட்சியில் ஒரு படித்துறையும் கட்டிக் கொடுக்கப்படுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற சிறிய பணிகளை அனைத்து ஊராட்சிகளிலும் செய்து முடிப்பதற்கு ஏற்கெனவே மறைந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் இடைப்பட்ட காலத்தில் நிறுத்தப்பட்டிருந்தாலும், இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் II என்ற தலைப்பில் அந்தத் திட்டம் தொடங்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக, ஐந்தாண்டுகளில் அனைத்து ஊராட்சிகளிலும், அதாவது, தமிழகத்தில் இருக்கக்கூடிய 12,525 ஊராட்சிகளும் ஆண்டுவாரியாக பிரித்தெடுக்கப்பட்டுள்ளன. ஆக, 2021–2022–ல் 2,657 ஊராட்சிகளும், 2022–2023–ல் 2,544 ஊராட்சிகளும் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. ஆக, 5,201 ஊராட்சிகளுக்கு இந்த இரண்டு நிதியாண்டுகளில், 2,610 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, அனைத்து தேவைகளும், அனைத்து ஊராட்சிகளிலும் எதிர்காலத்தில் நிறைவேற்றித் தரப்படும். அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தக் கோரிக்கைகளும் இந்த நிதியின் மூலமாக நிறைவேற்றித் தரப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

2022 ஏப்ரல் 26]

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டத்தில் காவேரி ஆற்றங்கரை ஓரத்திலே, கொக்கராயன்பேட்டை என்ற கிராமமும், பாப்பம்பாளையம் என்ற கிராமமும் இருக்கின்றன. அங்கிருந்துதான் திருச்செங்கோட்டில் இருக்கிற பிரசித்தி பெற்ற அர்த்தநாரீஸ்வரர் கோயிலுக்கு தீர்த்தம் கொண்டு வரப்படுகிறது. அதற்கான தீர்த்தவாரி விழா நடத்த வேண்டுமென்கிற கோரிக்கை மக்களிடத்தில் நெடுங்காலமாக இருந்துவருகிறது. அந்தத் தீர்த்தவாரியோடு சேர்த்து ஒரு படித்துறையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காவேரி ஆற்றங்கரை ஓரத்திலே அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய அடிப்படைத் தேவைகளை அனைத்து கிராமங்களிலும் நிறைவேற்றித் தர வேண்டுமென்பதுதான் இந்தத் துறையினுடைய நோக்கம். அதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு கட்டளையாகப் பிறப்பித்திருக்கிறார்கள். அந்த வகையில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, எதிர்காலத்தில் அதைப் பற்றி ஆய்வு செய்து, அவசியம் எனில், நிச்சயமாக நிறைவேற்றித் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதி, கோனூர் கிராமத்தில் திப்பம்பட்டி அருகில் காவேரி ஆறு ஓடுகின்றது. அந்த ஆறு 100 அடி தாழ்வாக இருக்கின்றது. கிட்டத்தட்ட 10,000 பேர் வசித்து வருகிறார்கள். அதில் daily 100 பேர் கோயில் விஷயமாகவும், சடங்கு செய்வதற்கும் வருகிறார்கள். அந்தப் பகுதி குண்டும், குழியுமாக இருக்கின்றது. கோனூர் திப்பம்பட்டியில் படித்துறை கட்டி சடங்குகள் செய்வதற்கு shed அமைத்துக் கொடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ளது ஆறு சம்பந்தப்பட்டதாக இருக்கிறது. ஒருவேளை அது நீர்வளத் துறையைச் சார்ந்ததாக இருந்தாலும், இரு துறைகளுடைய அலுவலர்களோடு கலந்துபேசி, பொதுமக்களுடைய தேவைகளை எதிர்காலத்தில் பூர்த்தி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. இளங்கோ அவர்கள்.*

திரு. ரா. இளங்கோ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சி தொகுதியில் க.பரமத்தி ஒன்றியத்திற்குட்பட்ட விஸ்வநாதபுரி, ராஜபுரம் பகுதிகள் அமராவதி ஆற்றங்கரை ஓரத்தில் அமைந்திருக்கின்றன. இந்தப் பகுதிகளில் வெள்ளக் காலங்களில் தண்ணீர் ஊருக்குள் வருகிறது. அதற்காகத் தடுப்புச் சுவரும், படித்துறையும் அமைத்துத் தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணிகளை அமராவதி ஆற்றை ஒட்டியுள்ள பகுதிகளில் மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கிறார். சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் உரிய கருத்துருக்களை அங்கே இருக்கக்கூடிய அலுவலர்களோடு தொடர்பு கொண்டு தெரிவித்தார்களேயானால், நிச்சயமாக, அதை நிறைவேற்றித் தருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் *176, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*